செய்தி வெளியீடு எண்.766 நாள்.27.11.2007

**28.11.2007 முதல் 13.12.2007 வரை தமிழகத்தில்**
**மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் தமிழக இலக்கிய சுற்றுலா**

2007 ஆம் ஆண்டு நவம்பர்–டிசம்பர் மாதங்களில் மலேசியாவிலிருந்து 34 பேர்கள் கொண்ட தமிழ் எழுத்தாளர்கள் குழு 16 நாட்கள் தமிழ்நாட்டில் இலக்கிய சுற்றுலா மேற்கொள்கின்றனர். இவர்கள் 28.11.2007 அன்று காலை சென்னை வந்தடைந்து, புதுவை, பூம்புகார், மயிலாடுதுறை, தஞ்சாவூர், சித்தன்னவாசல், மதுரை, கன்னியாகுமரி, கோவை, பொள்ளாச்சி, ஏற்காடு, மாமல்லபுரம், உத்திரமேரூர் ஆகிய இடங்களுக்கு சென்று தமிழ் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் மற்றும் அது தொடர்பான நினைவுச் சின்னங்களை பார்வையிட்டு, சென்னை பல்கலைக்கழகம், புதுச்சேரி பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பொள்ளாச்சி நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி மற்றும் எஸ்.ஆர்.எம். கல்லூரி, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய இடங்களில் நடைபெறும் கருத்தரங்குகள், கூட்டங்களில் பங்கேற்று 130 ஆண்டுகள் வரலாறு உள்ள மலேசிய தமிழ் இலக்கியத்தின் தொடக்க நிலை, வளர்ந்த நிலை குறித்து ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கின்றார்கள். கூட்டங்களில் மலேசிய தமிழ் சமூகத்தின் வரலாற்றினை விரிவாக எடுத்துரைக்கின்றனர்.

மலேசிய நாவல், இலக்கியம், சிறுகதைகள், தமிழ் வளர்த்த சங்கங்கள், இயக்கங்கள் பற்றியும், கட்டுரை இலக்கியம், சமய ஆன்மீகம் மற்றும் கலைகள் சார்ந்த கட்டுரைகள், மலேசிய தமிழ்க் கலாச்சார, மொழி இலக்கியக் கூறுகள் பற்றியும், அரசில் வரலாறு/அரசியல் நிலைமை குறித்தும், தமிழ் மரபுக் கவிதை, புதுக்கவிதை, தமிழ்நாட்டு இலக்கிய தாக்கம், பிற மொழி இலக்கிய தாக்கங்கள் பற்றியும், மலேசிய பத்திரிகைகள், தொலைக்காட்சிகளின் பங்கு, தமிழ் இலக்கியம் வளர்ப்பதற்கு வெவ்வேறு நிறுவனங்கள் நடத்திய போட்டிகள் பற்றியம் தோட்டத் தொழிலாளர்களின் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணிகள் பற்றியும், திறனாய்வுக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடைபெற்று வருவது பற்றியும், மலேசியா தமிழ் இலக்கியத்தில் மகளிரின் பங்களிப்பு பற்றியும், மலேசியாவில் பன்மொழி, இலக்கியங்களினூடே தமிழ் இலக்கியத்தின் நிலை ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் சமர்ப்பித்து கலந்துரையாடுகின்றனர்.

கருத்தரங்குகள், கூட்டங்கள், வரலாற்று சிறப்புமிக்க இடங்களை பார்வையிடும் இடங்களிலும் தமிழக பத்திரிகையாளர்களை சந்தித்து அவர்களுடைய கேள்விகளுக்கு பதிலளிக்கவும் உள்ளார்கள்.

மாமல்லபுரம், பூம்புகார், தஞ்சாவூர், சித்தன்னவாசல், ஆதிச்சநல்லூர், கன்னியாகுமரி, உத்திரமேரூர் ஆகிய இடங்களில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க இடங்களை பார்வையிடுகின்றார்கள்.

2004 ஆம் ஆண்டில் மலேசிய தமிழ் எழுத்தாளர் குழு ஒன்று தமிழ்நாட்டுக்கும், புதுவைக்கும், பெங்களூருக்கும் இலக்கிய சுற்றுலா மேற்கொண்டு கருத்தரங்குகள், சொற்பொழிவுகளும் நடத்தியது. இதன் மூலம் தமிழ்நாட்டின் பல முக்கிய எழுத்தாளர்கள், கல்வி நிறுவனங்களின் நட்பைப் பெற்றார்கள். இம்முயற்சிகளை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இவர்களுடைய இவ்வாண்டு பயணம் அமைகின்றது.

மலேசிய தமிழ் இலக்கியம் தமிழக பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் பாடமாகவும், ஆராய்ச்சிக்குரிய பொருளாகவும் ஏற்கப்பட வேண்டும் என்பதற்காக இவ்விலக்கிய சுற்றுலாவை மேற்கொள்கின்றனர்.

தமிழ் இலக்கிய வரலாறு எழுதும்போதெல்லாம் மலேசிய தமிழ் இலக்கியத்தைஒரு பகுதியாக பார்ப்பதற்கு இவ்விலக்கிய சுற்றுலா ஆவணமாக திகழும்.

மலேசிய தமிழ் எழுத்தாளர்கள் 34 பேர்கள் பெயர்கள் மற்றும் அவர்களின் விரிவான சுற்றுப்பயண விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

மலேசிய தமிழ் எழுத்தாளர்களின் இலக்கிய சுற்றுலா தமிழகத்தில் சிறப்பாக அமைய தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சுற்றுலாத் துறை, உயர் கல்வித் துறையினர் பணிகளை செய்து வருகின்றனர்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.

செ.வெ. எண் 766 நாள் 27-11-2007

## மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் தமிழக பயணம், 2007

பயணத் திட்டம்
28.11.2007 முதல் 13.12.2007 வரை
(16 நாட்கள்)

| | |
|---|---|
| 28.11.2007 | காலை ~~10.30~~ 9.15 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்து அடைதல், மாமல்லபுரம் இரவுத் தங்கல். |
| 29.11.2007 | சென்னைப் பல்கலைக்கழகத்தில் நாவல், சிறுகதை குறித்த கட்டுரைகள் சமர்ப்பித்தல் மற்றும் கருத்தரங்கு. மாமல்லபுரம் இரவுத் தங்கல். |
| 30.11.2007 | காலையில் மாமல்லபுரத்திலிருந்து புறப்பட்டு புதுச்சேரி சென்றடைதல். புதுச்சேரி இரவுத் தங்கல். |
| 01.12.2007 | புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தற்போது தமிழ் இலக்கியத்தின் நிலை குறித்த கருத்தரங்கு. புதுச்சேரி இரவுத் தங்கல். |
| 02.12.2007 | காலையில் புதுச்சேரியிலிருந்து புறப்பட்டு பூம்புகார், மயிலாடுதுறை வழியாக தஞ்சாவூர் சென்றடைதல். இரவுத் தங்கல். |
| 03.12.2007 | காலையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்தில் சமூக அறிவியல் சிந்தனைகள் குறித்த கருத்தரங்கு. இரவுத் தங்கல் – தஞ்சாவூர் |
| 04.12.2007 | காலை தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு சித்தன்னவாசல் வழியாக மதுரை சென்றடைதல். இரவுத் தங்கல் – மதுரை |
| 05.12.2007 | மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கவிதை தொடர்பான கருத்தரங்கு பிற்பகல் ஆதிச்சநல்லூர் வழியாக கன்னியாகுமரி சென்றடைதல். இரவுத்தங்கல் – கன்னியாகுமரி |
| 06.12.2007 | கன்னி யாகுமரியிலிருந்து புறப்பட்டு திருமங்கலம், பள்ளப்பட்டி, செம்பட்டி வழியாக கோவை சென்றடைதல். வழியில் பழனிமுருகனை தரிசித்தல் இரவுத் தங்கல் – கோவை |
| 07.12.2007 | பொள்ளாச்சி நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் கருத்தரங்கு - நம் நாட்டின் தமிழ் இலக்கியம்–மலேசிய தமிழ் இலக்கியம் ஓர் - ஒப்பீடு . இரவுத் தங்கல் – கோவை |
| 08.12.2007 | கோவையிலிருந்து புறப்பட்டு பிற்பகல் ஏற்காடு செல்லுதல். இரவுத் தங்கல்–ஏற்காடு |
| 09.12.2007 | ஏற்காடு சுற்றுலா. இரவுத் தங்கல்–ஏற்காடு |
| 10.12.2007 | காலையில் மாமல்லபுரம் புறப்படுதல். இரவுத் தங்கல்–மாமல்லபுரம் |
| 11.12.2007 }<br>12.12.2007} | வசதிப்படி SRM கல்லூரி நிகழ்ச்சிகளில் பங்கு, உத்திரமேரூர் குடவோலை முறை கல்வெட்டுக்கள் பார்வையிடுதல். இரவுத் தங்கல் – சென்னை |
| 13.12.2007 | இரவு சென்னை விமான நிலையத்திற்குச் சென்று 14.12.2007 விடியற்காலை 2.00 மணிக்கு மலேசியா புறப்படுதல். |

*****

PARTICIPANTS

| | | |
|---|---|---|
| 1. | RAJENDRAN<br>K.RAJAM | |
| 2. | ANTHONY<br>K. SUNDDRAJ | |
| 3. | ARUMUGAM M.<br>JOSEPH MR.S | |
| 4. | KATRHIGEHAN @ KARTHIGESH<br>KUMARASAMY MR. T. | |
| 5. | SABABATHY MR.V.<br>MURASU NEDUMARAN | |
| 6. | MUNIAN MR.V.<br>GUNANATHAN MR.A | |
| 7. | MUTHAYAM MR.T.<br>GOPAL SINGAM MR.R. | |
| 8. | RAJENDRAM MR.A.<br>VASANTHI MRS. | |
| 9. | .KRISHNAN MR.G.<br>KANTHAN MR.R | |
| 10. | PUNNIYAVAN MR.G<br>MURUGESAN MR.K. | |
| 11. | TANNASI MR.S<br>PALANIYANDY MR.A | |

| | | |
|---|---|---|
| 12. | K.POOBALAN | |
| | BALAKRISHAN MR.N | |
| 13. | R.SARASPATHI | |
| | MENAGA MISS.S. | |
| 14. | RAJKUMARI MRS.S. | |
| | KRISHNAVENY MRS.R | |
| 15. | VIJAYALAKSHMI | |
| | SESHI MRS.R | |
| 16. | KARUPPIAH MR.M | |
| | MUHAMED SULTAN BIN MULLAH SYED MYDIN | |
| 17. | JAYALATCHUMI@ CHILALIS MRS.M. | |
| | THEVANAH MRS.E. | |

~~3/3~~ 5/5

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9